பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 03 வெள்ளிக்கிழமை 19.08.2022 கதிர் 175

## கொழும்பில் 10 மணிநேரம் நீர் விநியோகம் தடைப்படும்

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய மேம்படுத்தல் பணிகளுக்காக இவ்வாறு நீர் விநியோகத் தடை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அந்தச் சபை தெரிவித்துள்ளது.

☞2

## ஜனாதிபதியுடன் ஐ.நா. சபை பிரதிநிதிகள் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கான பெங்கொக் அலுவலகத்தின் பணிப்பாளர் டேவிட் மஸ்னெக்யன் கார், ஐக்கிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதி ஹெனா சிங்கர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தின் பிரதானி ஆண்ட்ரியாஸ் கர்பாதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

☞2

## 8 வயது சிறுவனை கால்வாயில் வீசிய கிராம சேவகர் கைது

பொல்கஹவெல – உடபொல பகுதியில் 8 வயது சிறுவனைக் கால்வாயில் வீசினார் எனக் கூறப்படும் கிராம உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடபொல கிராம உத்தியோகத்தரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கால்வாயில் யானை ஒன்று குளிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த, 8 வயது

☞2

## ஆணின் சடலம்

கெஸ்பேவ - பொல்கஸ்ஓவிட பிரதேசத்தில் உள்ள கால்வாய் ஒன்றில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசர இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட

☞2

# ஜெனிவா மாநாடு ஒருபோதும் இலங்கைக்குச் சவால் இல்லை

## அடித்துக் கூறுகின்றார் ரணில்

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மாநாடு இலங்கைக்கு ஒருபோதும் சவாலாக - ஆபத்தாக அமையாது. எதிர்வரும் மாநாட்டில் இலங்கை விவகாரங்களை விசேட குழு ஒன்று கையாளும். அதேவேளை, அந்த மாநாட்டில் இலங்கையின் நிலைப்பாட்டை அறிக்கையூடாக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பிப்பார்.**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

☞2



## விபத்தில் மாணவன் பரிதாப உயிரிழப்பு!

சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திக்வெல்ல உடதெனிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்கள் இருவர் சைக்கிளில் பயணித்தனர் எனவும், அதனைக் கட்டுப்படுத்த

☞2

கல்வி சமூகப் பிரச்சினைகள்;

## வடக்கில் அமைச்சர் நேரில் கலந்தாய்வு



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

☞2

## இலங்கையை இந்தியா ஒருபோதும் கைவிடாது!

### ஜெய்சங்கர் உறுதி



இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றது.

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர்

☞2

## கோட்டா அடுத்த வாரம் நாடு திரும்புவது உறுதி

### அவரது சட்டத்தரணியும் வெளிவிவகார அமைச்சருமான அலி சப்றி தெரிவிப்பு



இலங்கையிலிருந்து தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் இலங்கைக்கு வருவது உறுதி என்று வெளிவிவகார அமைச்சரும் கோட்டாபயவின் சட்டத்தரணியுமான அலி சப்றி தெரிவித்தார்.

☞2

## சுதந்திரக் கட்சியின் யாப்பை திருத்த மைத்திரி தீர்மானம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பைத் திருத்துவதற்குக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

அடுத்த மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் 71ஆவது வருடப் பூர்த்தியின்போது இந்த யாப்புத் திருத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடப் பூர்த்தி மஹரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.



அன்றைய தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் மத்திய செயற்குழு கூட்டம் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மைத்திரியிடம் சி.ஐ.டியினர் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த ரோயல் பார்க் படுகொலை குற்றவாளி ஜூட் ஷிரமந்த அன்டனி ஜயமஹவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய, ஜனாதிபதி பொதுமன்னிப்பு தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையை மையப்படுத்தி சி.ஐ.டியில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

☞2

## இலங்கை வரும் கோட்டாவுக்கு அதியுச்ச பாதுகாப்பு வழங்குக!

### ஜனாதிபதியிடம் 'மொட்டு'க் கட்சி கோரிக்கை

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பாக நாடு திரும்பவும், அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளையும் செய்து கொடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

☞2

## வடக்கில் அமைச்சர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் கோப்பாய் தேசிய கல்வியல் கல்லூரியிலும் இடம்பெற்றது.

கல்விச் சமூகம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

## இலங்கையை இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இவ்வருடம் மட்டும் இந்தியா 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

தாய்லாந்தில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் 'இந்தோ - பசிபிக் பற்றிய இந்தியாவின் பார்வை' என்ற தலைப்பில் நேற்று விரிவுரை ஆற்றிய பின்னர் தொடர்ச்சியான கேள்விகளுக்குச் ஜெய்சங்கர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மைத்திரியிடம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜகிரிய ரோயல் பார்க் சொகுசு குடியிருப்புத் தொகுதியின் படிக்கட்டுக்களில் வைத்து 2005 ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி தனது காதலியின் சகோதரியான 19 வயதுடைய இவோன் ஜொன்சன் எனும் யுவதியை அவர் அணிந்திருந்த காற்சட்டையைக்கொண்டு கழுத்தை நெரித்தும், தலையைத் தரையில் அடித்து மண்டையோட்டை 64 இடங்களில் சேதப்படுத்தியும் கொடூரமாகப் படுகொலை செய்த ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜயமஹ கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜயமஹவுக்கு 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி மன்னிப்பின் கீழ், அந்தத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே 2019ஆம் ஆண்டு அவருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டிருந்தது.

## கோட்டா அடுத்த வாரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய நாடு திரும்புவதில் இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக எந்த ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர் இராஜதந்திர மார்க்கமாக நாடு திரும்புவார். அவர் இலங்கையின் குடிமகன், அவர் விரும்பியவாறு பயணம் செய்யலாம் - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேலும் கூறினார்.

இதேவேளை, கோட்டாபயவின் உறவினரான உதயங்க நேற்றுமுன்தினம் இதே தகவலை வெளியிட்டிருந்தார்.

## இலங்கை வரும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றிரவு நடைபெற்றது.

சர்வகட்சி அரசு உட்பட அடுத்தகட்ட வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும், முன்னாள் ஜனாதிபதி என்றவகையில் அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

பஸில் ராஜபக்ஷ, சாகர காரியவசம் உட்பட 'மொட்டு'க் கட்சியின் பிரமுகர்கள் பலரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

## விபத்தில் மாணவன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாமல் சைக்கிள் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த சைக்கிளில் பயணித்த இரு மாணவர்களும் திக்வெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சைக்கிளில் முன்னால் இருந்து பயணித்த மாணவர் உயிரிழந்துள்ளார்.

திக்வெல்ல, கொண்டெனிய பிரதேசத்தில் வசிக்கும் 13 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய பாடசாலை மாணவன் மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சைக்கிளின் பிரேக் பிடிக்காததால் விபத்து இடம்பெற்றது எனத் தெரியவந்துள்ளது.

## ஆணின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதலின்போதே குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் இன்று தெரிவித்துள்ளது.

இறந்தவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலைஷ்யில், அவர் 5.06 அடி உயரம்கொண்டவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீதிவான் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 8 வயது சிறுவனை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவனைச் சந்தேகநபர் தூக்கி கால்வாய்க்குள் வீசிக் காயப்படுத்தினார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சந்தேகநபரின் நடவடிக்கையால் சிறுவன் எலும்பு முறிந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிறுவனின் பெற்றோர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தின்போது, 54 வயதான சந்தேகநபர் மதுபோதையில் இருந்தார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் 10 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய, கொழும்பு 5 மற்றும் 6 ஆகிய பகுதிகளில் நாளை சனிக்கிழமை இரவு 11 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி வரை 10 மணித்தியால நீர்வெட்டு அமுலாக்கப்படவுள்ளது.

அத்துடன், கொழும்பு 4 பகுதிக்கு குறைந்த அழுத்தத்துடன் நீர் விநியோகிக்கப்படும் எனவும் நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியுடன் ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஜனாதிபதியின் இளைஞர் மற்றும் நிலையான அபிவிருத்தி விவகாரப் பணிப்பாளர் ரந்துல அபேதீர ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## ஜெனிவா மாநாடு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு சிவில் அமைப்புக்கள் கடிதங்கள் அனுப்பியுள்ளன. இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன், 6 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் 316 தனிநபர்கள் மீதான தடை நீக்கத்துக்கும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மாநாட்டுக்கும் இடையில் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், இந்த அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தீவிரமான ஆராய்வின் பின்னரே தடை நீக்கப்பட்டது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எதிர்ப் போராட்ட வழிவம்

பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியம் நேற்றுக்கொழும்பில் நடத்திய போராட்டத்தை பொலிஸார் எதிர்கொண்ட விதம் –அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை – பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிப் பீடத்தை, ஜனநாயக மார்க்கத்தில் எதிர்ப்பது என்ற பெயரில், பெரும் எண்ணிக்கையில் ஒன்று திரண்டு, அதையே வன்முறைத் தளமாக்க முயற்சித்தால், அதற்கு இடம் அளிக்கப்படவே மாட்டாது என்ற செய்தியை ரணில் அரசு மீண்டும் ஒரு தடவை உறுதிப்படக் கோடி காட்டி இருக்கின்றது.

நேற்றைய போராட்டத்தை அரசு கையாண்ட விதத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் அவதானிக்கப்பட வேண்டும்.

முதலாவது – போராட்டத்திற்காக அங்கு ஒன்று திரண்ட மாணவர்கள் எண்ணிக்கையிலும் விட அதிக எண்ணிக்கையில் ஒரே சமயத்தில் பொலிஸார், அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினரை அங்கு அரசு தலைமை தயாராகக் குவித்திருந்தது.

அடுத்தது – வழமையாக ஆர்ப்பாட்டத்தில் பேரணியாக வரும் போராட்டக்காரர்களை ஏதோ ஒரு இடத்தில் தடை போட்டு பொலிஸார் வழிமறிப்பர். அத்தடைகளை தள்ளி உடைத்துக் கொண்டு போராட்டக்காரர்கள் முன்னேறுவர். அச்சமயத்தில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியோ அல்லது நீர்த் தாரையைப் பீய்ச்சி அடித்தோ போராட்டக்காரர்களை பாதுகாப்புத் தரப்பினர் கலைப்பர். இதுதான் கடந்த வாரம் வரை நடந்தது. ஜனாதிபதி செயலகத்தையோ, அலரி மாளிகையையோ, பிற கட்டடங்களையோ ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றிய சமயங்களிலும் இப்படித்தான் நடந்தது. அந்தக் கட்டடங்களுக்கு முன்னால் தடுப்பு அமைத்து அவற்றைப் பாதுகாக்க முயன்ற பாதுகாப்பு தரப்பினர், தடுப்பைக் கோட்டை விட்டபோது நிலைமை எல்லை மீறியது. ஆனால் நேற்று பொலிஸ் அப்படித் தடுப்புப் போடவில்லை. மாறாக பல நூற்றுக் கணக்கில் பொலிஸார் மிக நெருக்கமாகத் தங்கள் தோளோடு தோள் சேர்த்து, கைகோர்த்து தங்கள் அணி மூலமே வலிமையான மனிதத் தடுப்பை ஏற்படுத்தினர். பின்னர் அவர்களே திடீரென்று போராட்டக்காரர்களை நோக்கி தாங்களே தடுப்பு அணியாக முன்னேறத் தொடங்கினர். போராட்டக்காரர்கள் நோக்கி, நேர் எதிரிடையாக இன்னொரு வலிமையான போராட்ட அணி இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னேறுவதான நிலைமை. அதனால் பல்கலைக்கழக மாணவரின் போராட்ட அணி செய்வதறியாது குழம்பிப் பின்வாங்கத் தொடங்கியது. அந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி, நீர்த் தாரையைப் பீய்ச்சி நிலைமையை விரைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது பொலிஸ் தரப்பு.

முள்ளை முள்ளால் எடுப்பது போல, ஆர்ப்பாட்டம் செய்து கூட்டமாக முன்னேறி, தடைகளை உடைக்க முயல்வோரை, அதே வகையில், அதே வழியில், கூட்டமாகப் பொலிஸாரே முன்னேறி ஆர்ப்பாட்டத்தை முறியடிக்கும் புதிய திட்டத்தை இம்முறை கட்டவிழ்த்து இருக்கின்றார்கள்.

ஜனநாயகப் போராட்டம் என்ற பெயரில் ஆள்களைத் திரட்டி, அப்போது சேரும் கூட்டத்தில் கும்பல் மனப்பான்மை ஏற்படுத்தி, பெரும் களேபரம் பண்ணி, அந்தக் கும்பல் மனோநிலையை வன்முறையாக்கி, அந்த வன்முறையை ஜனநாயக நடவடிக்கை என்ற தத்துவமாகக் காட்ட முயலும் தந்திரோபாயத்தை அதே வழியில் கையாள பொலிஸ் முற்பட்டு விட்டது என்பதுதான் இங்கு முக்கிய விடயம்.

எதேச்சதிகார ஆட்சி நடத்திய கோட்டாபயவை மக்கள் எழுச்சிப் போராட்டம் என்ற பெயரில் துரத்த முடிந்தது. ஆனால் அதனையே அதிகாரத்துக்கு வரும் எல்லோரையும் பதவி கவிழ்க்கப் பாவிக்கலாம் என்ற மனப்பாங்கு இனிச் சரி வராது என்பதைத்தான் நேற்றைய போராட்டத்தை பொலிஸார் கையாண்ட விதம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

# ரணிலால் மாத்திரம் நாட்டை மீட்க முடியாது

## பாலித தெவரப்பெரும கருத்து



பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டும் மீட்டெடுக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெரும தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் –

ஒரு குருவி தனியாக வலையில் சிக்குண்டால்அதனால்எதுவும்செய்துகொள்ள முடியாது. ஆனால் ஒரு குருவிக் கூட்டமே வலையில் சிக்குண்டால் அந்த வலையையும் சுமந்து கொண்டு அந்தக் கூட்டத்தால் பயணிக்க முடியும். இந்த நிலையில்தான் இன்று அரசாங்கம் உள்ளது.

இந்த நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டும் தனியாக முடியாது.

சஜித் பிரேமதாஸவாலும் ஒருபோதும் நாட்டை மீட்க முடியாது.

நான் இந்நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வரவேண்டும் என்ற கருத்துடன் நீண்டகாலமாக இருந்தவன்.

ரணில் விக்கிரமசிங்கவை அன்று எதிர்த்த தரப்பினர் கூட, இன்று அமைச்சுப் பதவிகளுக்காக அவரின் முன்பாக மண்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.– என்றார்.

# வன்முறை இடம்பெற்றால் தேசியப் பாதுகாப்பு பலவீனமடைந்துவிட்டதாகவே அர்த்தப்படும்!

## பந்துல கூறுகிறார்



தங்களின் கொள்கையை முன்னிலைப்படுத்தி வன்முறையில் ஒரு தரப்பினர் ஈடுபடுவார்களாயின் அந்நாட்டில் என்றும் தேசியப் பாதுகாப்பு பலமானதாக இருக்காது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வவொன்றில் உரையாற்றிய அவர் –

தனது அரசியல் காலத்தில் இதுவரை அமைச்சர்களுக்கான வாசஸ்தலத்தில் தான் வாழ்ந்தவரல்லர் என்றும் வீட்டுக்கான வாடகையைக் கூட அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டவரல்லர் என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில் தனக்கு அரசமைப்பின் 14 (சி) சரத்து இல்லாமல் செய்யப்பட்டதாகவும் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை இலங்கை பிரஜையாகிய தனக்கு இல்லாமல் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் தனது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியைக் கூட இதுவரை பயன்படுத்தியது கிடையாது என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

மேலும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு தனது சொந்த வீட்டில் வசிக்க முடியாதுபோனால் அந்த நாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மட்டுமன்றி உலக வரலாற்றிலேயே முதன்முறையாக மக்கள் பிரதிநிதியொருவர் மிகவும் கொடூரமான முறையில், வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்றும் 12 மணிநேரத்திற்குள் 72 மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் உலக நாடாளுமன்ற வரலாற்றிலேயே கரும்புள்ளி என்றும் அவர் தெரிவித்தார்.

# கோகிலா ஹர்ஷனி குணவர்தன வீட்டுக்குள் நுழைந்தவர் கைது!

நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா ஹர்ஷனி குணவர்தனவின் வீட்டுக்குள் நுழைந்து சேதம் விளைவித்து அவரது வீடு மற்றும் அலுவலகத்துக்குத் தீ வைத்த குற்றச்சாட்டில் 25 வயதுடைய இளைஞனை கம்பஹா நல்லா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினரின் வீடு, அலுவலகம் மற்றும் அவரது சகோதரரின் வீடுகளுக்குள் நுழைந்து சொத்துக்கள் மற்றும் வாகனங்களுக்குத் தீ வைத்த சந்தேகநபர் புதன்கிழமை லொலுவாகொடவில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த சந்தேகநபர் அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் வெல்லவாய பகுதியில் கைது!

வெல்லவாய பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சந்தேக நபர்கள் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கங்காசிறிபுர பிரதேசத்தில் வெல்லவாய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்களிடமிருந்து 17 கிராம் 270 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் எதிவெல, வெல்லவாய மற்றும் மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.


சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்யப் படைகள் விலகாமல் அமைதிப் பேச்சு நடக்காது

## உக்ரைன் தலைவர் ஜெலன்ஸ்கி திட்டவட்டம் ஐ.நா.பொதுச் செயலரிடம் நேரில் தெரிவிப்பு



கீவ்,ஒக.19

படைகளைத் திரும்பப் பெறாமல் ரஷ்யாவுடன் எந்த அமைதிப் பேச்சையும் உக்ரைன் நடத்தாது என ஜெலன்ஸ்கி தெரிவித்து விட்டார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் கடந்த பெப்ரவரி மாதம் தாக்குதலைத் தொடங்கின. தற்போது வரை தொடர்ந்து வரும் இந்த தாக்குதலுக்கு உக்ரைன் இராணுவம் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது. இந்தப்போரால்உக்ரைனில்இருந்துலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறி யுள்ளனர். இரு தரப்பிலும் மிகப் பெரிய அளவில் உயிர்ச்சேதமும் ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் – ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வர துருக்கி நாட்டின் அதிபர் ரெசெப் தயிப் எர்டோகன் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். போர் தொடங் கிய பின்னர் முதன்முறையாக அவர் உக்ரைன் சென்றுள்ளார்.

அவருடன் ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோ னியோகுட்டரெஸும்,உக்ரைன்அதிபர்ஜெலன்ஸ்கியை நேற்று சந்தித்து விரிவான ஆலோசனை நடத்தினர். மூவருக்கும் இடையில் லிவிவ் நகரில் உச்சிமாநாடு நடைபெற்றது.

இந்த நிலையில் படைகளை திரும்பப் பெறாமல் ரஷ்யாவுடன் எந்த அமைதிப் பேச்சையும் உக்ரைன் நடத்தாது என அந்நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்து விட்டார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. ரஷ்யா அமைதிக்கு தயாராக இருப்பதாக எர்டோகன் கூறியமையை அடுத்து தான் மிகவும் ஆச்சரியமடைந்தேன் என ஜெலென்ஸ்கி கூறினார்.

மேலும் முதலில் அவர்கள் எங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும், பின்னர் பார்க்கலாம் என்று உக்ரைன் அதிபர் கூறியுள்ளார்.

தெற்கு உக்ரைனில் உள்ள ஜபோரிஜியா அணுமின் நிலையத்திற்கு அருகே நடக்கும் சண்டை குறித்துத் தாம் மிகுந்த கவலையடைகிறேன் என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் தெரிவித்துள் ளார். சாபோரிஜியாவிற்கு ஏதேனும் சாத்தியமான சேதம் ஏற்பட்டால் அது தற்கொலைதான் என்று குட்டெ ரெஸ் எச்சரித்தார். மோதல் வெடித்த பின்னர் ஜெலென்ஸ்கி மற்றும் குட்டெரெஸின் முதல் சந்திப்பு இதுவாகும். எர்டோகன் ஐ.நா. செயலாளர் நாயகத் தின் கவலைகளை எதிரொலித்தார். ஜபோரிஜியா அணு மின் நிலைய ஆபத்துக் குறித்து கருத்து வெளியிட்ட ஐ.நா.பொதுச்செயலாளர் 'மற்றொரு செர்னோபில்பேரழி வின் ஆபத்து குறித்துத் தான் கவலைப்படுகிறேன்' என செய்தியாளர்களிடம் கூறினார்.

# அல்ஜீரியாவில் காட்டுத் தீயில் சிக்குண்டு மேலும் 26 பேர் கரிக்கட்டைகளாகினர்!





அல்ஜீயர்ஸ்,ஒக.19

அல்ஜீரியா நாட்டில் காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது. அதில் சிக்கி மேலும் 26 பேர் பலியாகி உள்ளனர்.

ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவின் வட பகுதி யில் காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது. 8 மாகா ணங்கள் காட்டுத்தீயின் தாக்குதலின் கீழ் சிக்கி உள்ளன. இந்த தீயில் துனிசியா எல்லை நகர மான எல் டார்ப் நகரைச் சேர்ந்த 24 பேர் எரிந்து கரிக்கட்டைகள் போல ஆகினர். மேலும் செட்டிப் நகரில் காட்டுத்தீக்கு ஒரு தாயும், மகளும் இரை யானார்கள். இதனால் மொத்த பலி எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. முன்னதாக 11 பேர் காட்டுத்தீக்கு இரையாகி இருந்தனர்.

இந்த உயிரிழப்புகளை அல்ஜீரியாவின் உள்துறை மந்திரி கமெல் பெல்ஜாத் உறுதி செய்தார். காட்டுத்தீயில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அந்த நாட்டின் அதிபர் அப்தெல் மஜித் டெப்பவுன் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

காட்டுத்தீயை ஹெலிக்கொப்டர்கள் உதவி யுடன் அணைப்பதற்கு தீயணைப்புப் படையினர் முழுவீச்சில் களம் இறங்கி உள்ளனர். ஆனாலும் கட்டுக்குள் வராத இந்த காட்டுத்தீயால் நூற்றுக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இதுபற்றி சிவில் பாதுகாப்பு அமைப்பு கூறும்போது, எல்டார்ப் நகரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 16 இடங்களில் காட்டுத்தீ பரவி இருக்கிறது என தெரிவித்தது.

வடக்கு அல்ஜீரியா ஒவ்வொரு ஆண்டும் காட்டுத்தீயால் பெரும் பாதிப்பினை சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டும்கூட அங்கு காட்டுத்தீயில் சிக்கி 90 பேர் பலியானமையுடன் ஒரு லட்சம் ஹெக்டேயர் காடுகள் எரிந்து சாம்பலா னமை நினைவுகூரத்தக்கது.

# மேற்கு சீனாவில் கனமழை வெள்ளத்தில் 16 பேர் சாவு



பெய்ஜிங்,ஒக.19

மேற்கு சீனாவில் கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 16 பேர் பலியாகினர். மேலும் 18 பேர் மாயமாகி உள்ளனர்.

மேற்கு சீனாவில் ஏற்பட்ட திடீர் கனமழையினால் நிலச்சரிவு ஏற்பட்டது, இதனைத் தொடர்ந்து மக்கள் வசிக்கும் பகுதிகளில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் குறைந்தது 16 பேர் பலியாகினர். மேலும் 18 பேரைக் காணவில்லை என்று சீன அரசு ஊடகம் இன்று தகவல் தெரிவித்துள்ளது.

வெள்ளப்பெருக்கால் சுமார் 25 கோடி டொலர் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஷங்காய் மாகாணத்தில் உள்ள டதோங் பகுதியில் பெய்த பெருமழையால், மலைப்பகுதி யில் மண் சரிவு ஏற்பட்டு ஆற்று வெள்ளம் ஊருக்குள் பாய்ந்தது. இதனால் 6 கிராமங்களில் உள்ள 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னதாக 36 பேரைக் காணவில்லை என்று அறிவித்த மீட்புப் பணியாளர்கள், அவர்களில் 18 பேரை அதிகாலையில் கண்டுபிடித்தனர் எனத் தகவல் தெரிவித்தனர்.

# கொரோனாத் தொற்றின் தாக்கம் உலகளாவிய ரீதியில் குறைகிறது

வொஷிங்டன்,ஒக.19

கொரோனாவுடன் வாழ வேண்டிய கட்டாய சூழ்நிலை யில் நாம் இருக்கிறோம். ஒரே வாரத்தில் உலகம் முழுவதும் 15 ஆயிரம் பேர் கொரோனாவால் இறந்து உள்ளனர். கொரோனா பரவல் குறைந்தாலும் கடந்த 4 வாரங்களில் இறப்பு விகிதம் 35 சதவீதம் அதிகரித்து இருக்கிறது.

கடந்த 3 ஆண்டுகளாக கொரோனா பரவல் பொது மக்களை அச்சுறுத்தி வருகிறது. தடுப்பூசி போன்ற தடுப்பு நடவடிக்கைகளால் தற்போது இதன் தாக்கம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவதால் பொதுமக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர். இதனால் கொரோனா விதி முறைகளை மறந்து பொதுமக்கள் சகஜ நிலைக்கு திரும்பி விட்டனர். கொரோனாவுடன் வாழ பழகி விட்டனர். கடந்த வாரம் 54 லட்சம் பேரை கொரோனா தாக்கி உள் ளது. இது அதற்கு முந்தைய வாரத்தை விட 24 சதவீதம் குறைவு என உலக சுகாதார அமைப்பு தெரிவித்து உள் ளது. உலகில் எல்லா இடங்களிலும் கொரோனா பரவல் குறைந்து வருகிறது. ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பியாவில் கிட்டத்தட்ட 40 சதவீதமும் மத்திய கிழக்கு நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளதாகவும் தெரியவந் துள்ளது. இறப்புகளும் குறைய ஆரம்பித்து இருக்கிறது. ஆனாலும் ஆசியாவில் ஒரு சில பகுதிகளில் இன்னும் சாவு எண்ணிக்கை சற்று அதிகமாகதான் உள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவன தலைவர் டெட்ரோஸ் அதோனம் கெப்ரியேசஸ் கூறியவை வருமாறு:–

கொரோனாவுடன் வாழ வேண்டிய கட்டாய சூழ் நிலையில் நாம் இருக்கிறோம். ஒரே வாரத்தில் உலகம் முழுவதும் 15 ஆயிரம் பேர் கொரோனாவால் இறந்து உள்ளனர். கொரோனா பரவல் குறைந்தாலும் கடந்த 4 வாரங்களில் இறப்பு விகிதம் 35 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. கொரோனா வைரஸ் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை. இதனால் பொதுமக்கள் இதுவரை கடைப்பிடித்து வந்த முகக் கவசம் அணிதல், கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், சமூக இடை வெளியை கடைப்பிடித்தல் போன்ற நடவடிக்கைகளை கைவிடக்கூடாது. இதுவரை தடுப்பூசி போடாதவர்கள் உடனே அதனை போட்டுக்கொள்வது நல்லது. 2 தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இது நம்மை மட்டுமல்ல சுற்றி உள்ளவர்களையும் பாதுகாக்கும்.

– இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# தேசியப் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு மாநிலங்கள் முன்னுரிமை தர வேண்டும்

## உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்தல்



இந்தியத் தலைநகர் டெல்லியில் தேசிய பாதுகாப்புக்கான உத்திகள் குறித்த இரண்டு நாள் மாநாடு நடைபெற்றது. இதில் அனைத்து மாநில காவல்துறை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, உரையாற்றியபோது, தேசிய பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு மாநிலங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமா மோடி பதவியேற்றமை முதல் உள்நாட்டுப் பாதுகாப்பு மட்டுமல்ல, அனைத்து பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் வழிமுறைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அண்டை நாடுகளுடனான நமது எல்லைப்பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் மக்கள்தொகைமாற்றங்கள்நடைபெறுகின்றன.

அது குறித்த தகவல்களைச் சேகரிப்பது மாநில காவல்துறை தலைவர்களின் பொறுப்பு, என்று தெரிவித்திருக்கிறார்.

ஜம்மு காஷ்மீர் பயங்கரவாதம், வடகிழக்கு தீவிரவாதக் குழுக்கள் மற்றும் இடதுசாரி தீவிரவாதம் ஆகியவற்றை ஒழிப்பதில் மத்திய அரசு பெரும் வெற்றியை பெற்றுள்ளது. போதைப்பொருள் சரக்கைப் பிடிப்பது மட்டும் போதாது, போதைப்பொருள் கடத்தல் கும்பலை அடிவேர் வரை முற்றிலுமாக அகற்றுவது மிகவும் முக்கியம்.

பல்வேறு வகையான குற்றங்கள் குறித்த தரவுத்தளத்தை மத்திய அரசு தயாரித்து வருகிறது. அறிவியல் அணுகுமுறையுடன், பணிகள் நடைபெறுகின்றன. பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்த 5ஜி தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும், தொழில்நுட்பத்துடன், மனித நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கும் சம அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அ.தி.மு.க. பொதுக்குழுவுக்கு எதிரான உத்தரவு எதிர்த்து எடப்பாடி பழனிசாமி மேன்முறையீடு



அ.திமு.கவில் எடப்பாடி பழனிசாமியின் ஒற்றைத் தலைமை நடவடிக்கைகளை நிராகரித்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி தரப்பு மேன்முறையீடு செய்துள்ளது.

அ.திமு.கவில் ஒற்றை தலைமை விவகாரம் காரணமாக எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ.பன்னீர் செல்வத்துக்கும் இடையே மோதல் வெடித்த நிலையில் கடந்த மாதம் 11 ஆம் திகதி சென்னை வானகரத்தில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கி பொதுக்குழுவில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்த பொதுக்குழு கூட்டம் செல்லாது என்று அறிவிக்ககோரி ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் முறையிடப்பட்டது. இதனை விசாரித்த சுப்ரீம் கோர்ட் இது தொடர்பாக உயர்நீதி மன்று உரிய விசாரணை நடத்த அறிவுறுத்தியது. இந்த வழக்கில், கடந்த மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழுவில் எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டமை செல்லாது என்று நீதிபதி அதிரடி உத்தரவை பிறப்பித்தார்.

அ.தி.மு.கவில் ஏற்கனவே இருந்த பழைய நிலையே தொடர வேண்டும் என்றும், 30 நாள்களுக்குள் ஒருங்கிணைப்பாளரும், இணை ஒருங்கிணைப்பாளரும் சேர்ந்து பொதுக்குழுவை கூட்ட வேண்டும் என்றும், இதில் சிக்கல் ஏற்பட்டால் பொதுக்குழுவை நடத்த ஆணையர் நியமிக்கப்படலாம் என்றும் நீதிபதி ஜெயச்சந்திரன் தீர்ப்பளித்துள்ளார். இந்த உத்தரவு எடப்பாடி பழனிசாமி அணியினருக்கு கடும் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

எடப்பாடி பழனிசாமியின் ஒற்றைத் தலைமை பதவிக்கு ஏற்பட்டுள்ள இந்த சட்ட சிக்கலை எப்படி தீர்ப்பது என்பது குறித்து அவரது ஆதரவாளர்கள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு உள்ளனர். இது தொடர்பாக சென்னை ராஜா அண்ணாமலைபுரம் கிரீன்வேஸ் சாலையில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் வீட்டில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டம் இரவு 10.30 வரை நீடித்தது. அப்போது டெல்லியில் உள்ள மூத்த வழக்கறிஞர்களுடன் தொலைபேசி வாயிலாகவும் ஆலோசனை நடத்தப்பட்டது. உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்வது பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி தரப்பில் இன்று சென்னை யர்நீதிமன்றில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

அ.தி.மு.க. பொதுக்குழு விவகாரத்தில் முந்தைய நீதிபதியின் தீர்ப்பே தொடர வேண்டும் என உத்தரவிடக் கோரி மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்கவும் முறையிடப்பட்டுள்ளது. இந்த வழக்கினை நீதிபதிகள் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீரசாவர்க்கர் பற்றிய பேச்சுக்கு எதிர்ப்பு சித்தராமையா கார் மீது முட்டை வீச்சு



சிவமொக்காவில் சுதந்திர தின பவள விழாவையொட்டி பா.ஜனதாவினர் வீரசாவர்க்கரின் படம் பொறித்த பதாகைகளை வைத்திருந்தனர். இந்த நிலையில் அந்த பதாகைகளில் இருந்த வீரசாவர்க்கரின் படத்தை கிழித்து ஒரு தரப்பினர் அகற்றினர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்து அமைப்பினர் திரண்டு வந்து போராட்டம் நடத்தினர்.

இதனால் இரு தரப்பினர் இடையே மோதல் உண்டாகும் அசாதாரண சூழல் நிலவியது. இதையடுத்து 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான சித்தராமையா, முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதியில் வீரசாவர்க்கர் படத்துடன் பதாகைகளை வைத்தது தவறு என கருத்து தெரிவித்திருந்தார். இதற்கு பா.ஜனதாவினர், இந்து அமைப்பினர் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், சித்தராமையா, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடகு மாவட்டத்திற்கு நேற்று பாதிப்பு பகுதிகளை பார்வையிட காரில் மைசூரு வழியாக சென்றபோது, சில இடங்களில் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வீரசாவர்க்கர் படம் விவகாரத்தில் அவர் தெரிவித்த கருத்தை கண்டித்தும் பா.ஜ.கவினர் சாலையின் இரு புறமும் திரண்டு வந்து போராட்டம் நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இருப்பினும் சித்தராமையா அங்கிருந்து காரில் திதிமதி நகருக்குள் செல்ல முயன்றார். அப்போது சித்தராமையா கார் மீது முட்டை வீசப்பட்டது. மேலும், வீரசாவர்க்கர் படங்களையும் சித்தராமையாவின் காரின் மீதாக போராட்டக்காரர்கள் வீசியுள்ளனர். இந்த சம்பவங்களால் அந்தப்பகுதியில் பரபரப்பும், பதற்றமும் நிலவியது.

## டெல்லி துணை முதல்வர் மணீஷ் வீட்டில் சி.பி.ஐ. தேடுதல் வேட்டை

*டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா வீடு உள்பட சுமார் 21 இடங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர். மதுபான விற்பனை உரிமம் வழங்கியதில் முறைகேடுகள் நடந்ததன என எழுந்த புகாரையடுத்து இந்த சி.பி.ஐ. சோதனை நடந்து வருகிறது.*

*இதுதொடர்பாக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடுகையில், சி.பி.ஐயை வரவேற்கிறோம். சி.பி.ஐக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு அளிப்போம். அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக துணை முதல்வர் மணீஷ் சிசோடியா குறிவைக்கப்படுகிறார்.*

*இதற்கு முன்பும் ரெய்டுகள் நடந்தன. ஆனாலும் எதுவும் கிடைக்கவில்லை. இப்போதும் எதுவும் கிடைக்கப் போவதில்லை, என்று பதிவிட்டிருந்தார்.*

*சி.பி.ஐ. வந்துவிட்டது. நாங்கள் நேர்மையானவர்கள். லட்சக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்குகிறோம். இது துரதிர்ஷ்டவசமானது. இந்த நாட்டில், யார் சரியாக வேலையைச் செய்தாலும் இப்படித்தான் தொந்தரவுகள் வருகின்றன.*

*அதனால்தான் நம் நாடு இன்னும் முதல் நிலை நாடாக இல்லை - என்று டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கூறியிருக்கிறார்.*



# மட்டக்களப்பில் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலில் இரத்ததான முகாம்





(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தக் குறைபாட்டினை நிவர்த்திக்கு முகமாக சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலில் மட்டக்களப்பு நகர ஜாமிஉஸ்சலாம் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் சலமா பவுண்டேஷன் என்பன இணைந்து ஏற்பாடு செய்த பெரும் இரத்ததான முகாம் ஒன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகர ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாசலில் இடம்பெற்றது .

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்த இரத்ததான முகாமை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர். எம்.பி. மதன், மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர் குமாரஶ்ரீ, ஜாமீயுஸ் சலாம் ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாகத் தலைவர் எம்.எச்.எம். சியாம் உட்பட பல சமய பிரமுகர்கள் மற்றும் பொதுநல அமைப்பின் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் இரத்த வங்கி சேவையாளர்கள் இந்த இரத்தம் சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இங்கு சேகரிக்கப்படும் இரத்தம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மகப்பேறு, தலசீமியா, டெங்கு நோய், புற்றுநோய் மற்றும் அவசரசத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த இரத்ததான நிகழ்வில் மட்டக்களப்பு நகரில் இயங்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

# திருமலை நகரக் கரையோரம் சுத்தம் செய்யும் கூட்டு நிகழ்வு





(ஹஸ்பர்)

சர்வமத இளையோர்களின் ஒத்துழைப்பில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் திருகோணமலை நகரசபைக்குட்பட்ட சமுத்திராகம கரையோரப் பகுதியில் கரையோரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

விழுது நிறுவன ஏற்பாட்டில் 'கழிவு முகாமைத்துவத்தினூடாக தொற்றுநோய்களின் பாதிப்பைக் குறைத்துக்கொள்ளவும், அருகிவரும் உயிர்ப்பல்வகைமையான மானினங்களைப் பாதுகாக்கவும் ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையின் போது 'மான்களை பாதுகாப்பது மானுடத்தின் பொறுப்பு' போன்ற வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டும் செயற்பாடாக அப் பகுதியில் ஒட்டப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி விஜயகுமார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் போன்றோர் பங்கேற்று கழிவுமுகாமைத்துவத்தின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டமையோடு இப்பணியில் ஈடுபட்ட இளையோர்களை ஊக்கப்படுத்தியிருந்தனர்.

திருகோணமலை நகரசபையும் கழிவுகளை முகாமைசெய்யும் வகையில் இணைந்து பூரண ஒத்துழைப்பு நல்கியதோடு, அப்பகுதி இளையோர்களும் தன்னார்வத்துடன் செயற்பட முன்வந்திருந்தனர். இக்கழிவு முகாமைத்துவ முன்னெடுப்பில் குறித்த கரையோர பகுதியும் மான் இனங்கள் வாழும் பகுதியும் விசேடமாக சுத்தம் செய்யப்பட்டன.




# சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் தனியார் ஒருவரினால் நேற்று அன்பளிப்பு செய்யப்பட்டன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பொதுமக்களின் பங்களிப்பை பெறுவது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸினாலும் வைத்தியசாலைகளினாலும் உதவிகள் கோரப்பட்டதற்கமைவாக டெலிகொம் பட்டயக்கணக்காளர் எம்.வை. இப்ராஹிம் அவர்கள் மர்ஹூம்களான தனது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக இவ்வுபகரணங்களை வழங்கி வைத்தார். சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி சனூஸ் காரியப்பரினால் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும், அபிவிருத்திக்குழு பிரதிநிதிகளும், பிரதேசவாசிகளும் கலந்து கொண்டனர்.

# திருமலையில் சிவில் அமைப்புக்களை இணைத்து மேம்படுத்தும் செயலமர்வு

(ஹஸ்பர)

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் நிதியுதவியுடன் கிண்ணியா 'சேர்விங் ஹியூமானிட்டி பவுண்டேஷன்' அமைப்பினரின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் செயலமர்வொன்று கிண்ணியா விஷன் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

PEACE எனும் இப்புதிய செயற்திட்டம் சமூகத்தில் ஒன்றிணைக்கப்பட்ட செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான மக்களின் ஈடுபாட்டை மேம்படுத்தல் People's Engagement and Action For Civic Empowerment(PEACE) எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 20 சிவில் சமூக அமைப்புகளை ஜனநாயக மற்றும் அபிவிருத்தி துறையில் மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம பிரதான விருந்தினராகவும், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் அத்தநாயக்க, நிறுவனத்தின் தலைவர் ரஸீனா சாலே, பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அங் கத்தவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் வளவாளராக திரு. சுஜீவன் சித்ரவேல் மற்றும் அவரது உதவியாளர் திரு. மதியழகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த 20 சிவில் சமூக அமைப்புக்களைக் கொண்ட திருகோணமலை சிவில் மன்றம் உருவாக்கப்பட்டது.



# மாந்தை கிழக்கு பிரதேசசெயலக வளாகத்தில் அறுவடை விழா!



தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இயற்கையான முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடை விழா புதன்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அறுவடை விழாவை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் அதிதிகளாக மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும், உற்பத்தித் திறன் பிரிவின் பிரதம இணைப்பாளருமான கே.லிங்கேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா, உலக உணவுத் திட்டத்தின் மாவட்டப் பொறுப்பதிகாரி ஜெயபவாணி, வவுனிக்குள நீர்ப்பாசனத் தொகுதி பொறியியலாளர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு தோட்டத்தை பார்வையிட்டதைத் தொடர்ந்து செய்கை பண்ணப்பட்ட பயிர் அறுவடை விழாவைத் தொடர்ந்து, பயிரிடல் செய்முறையை முன்னிலைப்படுத்தும் வகையில் வடிவைமைக்கப்பட்ட காணொலி வெளியீடும், அதிதிகளின்உரைகளுடன்அனுபவப்பகிர்வுகளும் இடம்பெற்றன. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்துக்கு அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்பை முன்மாதிரியாக எடுத்துக்காட்டும்முகமாகவே பிரதேச செயலக வளாகத்தில் இயற்கை விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில்பிரதேசசெயலகஉத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## வைத்தியத்துறையில் ஆளுமைக்கான விருது வைத்தியர் நந்தகுமாருக்குக் கிடைத்தது!





வென்மேரி அறக்கட்டளை நிறுவனத்தால் முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் மறைந்துள்ள தமிழ் ஆளுமைகளுக்கான விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் தமிழ் மக்களுக்காக அரும் பணியாற்றிய பல்துறை சார்ந்தவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விழாவில் வைத்தியத்துறையின் ஆளுமைக்கான விருது யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் நந்தகுமாருக்கு வழங்கப்பட்டது. யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி அதனை வழங்கிவைத்தார்.

இதற்கமைய, இரண்டு வயதில் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டு இரு கால்களும் செயல் குன்றிய நிலையில் தனது தளராத முயற்சியால் வைத்தியத்துறையில் சாதித்த வைத்தியர் நந்தகுமாருக்கு இந்த ஆளுமைக்கான விருது வழங்கப்பட்டது.




## உலகஉணவுத்திட்டஅவசரகால பணஉதவித்திட்டம்ஆரம்பிப்பு!

### முல்லைத்தீவில் நேற்று நடந்தது

உலக உணவுத் திட்டம் இலங்கையில் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களது உயிர்களைக் காப்பாற்றவும், அதிகரித்துவரும் உணவுப்பாதுகாப்பின்மையைத் தணிக்கவும் அவசர வேலைத்திட்டங்களில் அதிககவனம் செலுத்தி வருகிறது.

அதனடிப்படையில் ஒகஸ்ட் மாதத்திலிருந்து முல்லைத்தீவு, காலி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இனங்காணப்பட்ட உணவுப் பாதுகாப்பற்ற மக்களுக்கு பண உதவியை வழங்கும் திட்டத்தை முதல்ன்முதலாக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், மாற்று வலுவுள்ளோர்களைப் பயனாளிகளாக உள்வாங்கி இந்தத் திட்டத்தை முதலாவதாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைத்துள்ளது.

மல்லாவி இலங்கை வங்கிக் கிளையில் நேற்று வங்கி முகாமையாளர் ஜெயசாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த உதவித்திட்டத்தினை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

முதற்கட்டமாக மாந்தை கிழக்கில் 197 பயனாளிகளும், துணுக்காய் பிரதேச பிரிவில் 61 பயனாளிகளுமாக 258 பயனாளிகள் உள்வாங்கப்பட்டு ஓகஸ்ட் மாத உதவித் தொகையாக 15 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட சகல பயனாளிகளுக்கும் ஓகஸ்ட் மாதம் 15 ஆயிரம் ரூபாவும், நான்கு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட சமுர்த்தி பயனாளி குடும்பத்துக்கு மட்டும் அடுத்த இரு மாதங்களும் 7 ஆயிரத்து 500 ரூபாவும் ஏனையவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

மேலும் ஏனைய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பயனாளிகளின் தெரிவுகள் உலக உணவுத்திட்டம் மற்றும் பிரதேச செயலகம் ஊடாகத் தரவு வடிவமைப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அடுத்த வாரத்துக்குள் அவர்களுக்கான உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன.

# அவசர உதவி 7 கோடியே 50 லட்சம் டொலர்களாக உயர்த்தியது அல்பானீஸ் அரசாங்கம் இலங்கைக்கு

தெற்காசிய தீவான இலங்கைப் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையிலும், அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்கு படகுகளில் தப்பிச் செல்லும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையிலும், அல்பானீஸ் அரசாங்கம் இலங்கைக்கான அவசர உதவியை 7 கோடியே 50 லட்சம் டொலர்களாக உயர்த்தியுள்ளது. இதனை ஆஸ்திரேலியா ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் மிக மோசமான நிதிச்சரிவு கடந்த மூன்று மாதங்களில் விலைவாசி உயர்வு மற்றும் உணவு, எரிபொருள் மற்றும் இதர தேவைகளின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

அத்துடன் பணவீக்கம் 60 சதவீதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது. வாழ்க்கை நிலைமை மோசமடைந்ததன் விளைவாக, இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவிற்கு படகுகளில் செல்லும் முயற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை ஐந்து படகுகளை ஆஸ்திரேலிய எல்லைப் படை தடுத்து நிறுத்தியுள்ளது.

இலங்கையின் வீழ்ச்சிக்கு மத்தியில், அவசர மனிதாபிமான ஆதரவிற்காக ஆஸ்திரேலியா ஜூன் மாதம் 50 மில்லியன் டொலர்களை வழங்கியது.

இதனையடுத்து இன்று வெள்ளியன்று, உணவு மற்றும் சுகாதாரப் பொருள்களை விரைவாக வழங்க மேலும் 2 கோடியே 50 லட்சம் டொலர்களை ஆஸ்திரேலியா அரசாங்கம் அறிவிக்கவுள்ளது.

இந்தநிலையில் ஆஸ்திரேலியா, இலங்கை மக்களுடன் குறிப்பாகக் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்கும் மக்களுடன் நிற்கின்றது என வெளிவிவகார அமைச்சர் பென்னி வோங் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2022இல் வெளியிடப்பெற்றது.